# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா 5.00

முரசு 05 ஒலி 80 பிரசோற்பத்தி மாசி 03 (15 02 1992) சனி


## முட்டைக்குள் பெற்றோல் வவுனியாவில் கடத்தல்!

கோழி முட்டைக்குள் பெற்றோலை விட்டு வடக்கே கடத்தி வந்தவர் வவுனியா தடைமுகாமில் வைத்து படையினரிடம் அகப்பட்டுதாக்கப்பட்டார், முட்டை வியாபாரம் செய்து வரும் இவர் உண்மையான முட்டைகளுடன் பெற்றோல் அடைக்கப்பட்ட சுமார் 25 முட்டைகளையும் கலந்து கொண்டு வந்தார். தடைமுகாமில் தவறுதலாக ஒரு முட்டை உடைந்ததும் அதிலிருந்த பெற்றோல் வெளியே ஓடிய போது படையினர் கண்டனர் முட்டை வெள்ளை மஞ்சள் கருவை சிறிய —04 ஆம் பக்கம் பார்க்க

● மட்டக்களப்பில் விமானத் தாக்குதல் மத்தியிலும்

# பவள் வாகன ரோந்து மீது புலிகளின் அதிரடித் தாக்குதல்

## 16 படையினர் பலி; பவள்கள் சேதம் 12 போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பில் நேற்றுக் காலை விடுதலைப்புலிகள் பவள் கவச வாகனங்களில் சென்ற இராணுவ ரோந்து அணி மீது அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 16 இராணுவத்தினர் பலியாகினர் சில பவள் கவசவாகனங்களும் சேதமடைந்தன. 12 விடுதலைப் புலிப் போராளிகளும் வீரச்சாவு எய்தினர்.

நேற்றுக் காலை 7மணியளவில் மட்டக்களப்பு உன்னிச்சை முகாமிலிருந்து படையினர் பவள் கவச வாகனங்களில் ஆயித்திய மலை இராணுவ முகாம் நோக்கி ரோந்து சென்றனர்.

இந்த ரோந்து அணி மீது புலிகள் 6ஆம் கட்டை என்ற பகுதியில் வைத்து அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர்.

காலை 8மணிவரை சுமார் ஒரு மணி நேரம் மோதல்கள் அப்பகுதியில் இடம்பெற்றன.

படையினருக்கு உதவியாக விமானப்படையினரின் இரு குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகப்டரும் ரொக்கட் தாக்குதலை பரவலாக மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் மீதும் புலிகள் பதில் தாக்குதலை ஆரம்பித்ததையடுத்து விமானங்கள் திரும்பிச் சென்றுவிட்டன.

இத்தாக்குதலை ஊர்ஜிதம் —04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்கள்.

★ ஆர் பி ஜி - 1
★ ஆர் பி ஜி. ஷெல் - 4
★ ஏ கே. எல். எம் ஜி - 2
★ ஏ. கே. எல். எம். ஜி ரவை கூடுகள் - 2
★ ரி-50 துப்பாக்கிகள் - 12
★ ஏ.கே.ரகரவைகூடுகள்-48
★ ஐ எம் ரவைகள் - 1025
★ கைக்குண்டு - 1

## இந்திய புலனாய்வுக்குழு 10நாள்களின் பின் புறப்பட்டது

கொழும்பில் கடந்த 10 தினங்களாக ஸ்ரீலங்கா அதிகாரிகளுடன் தகவல்களை பரிமாறிக்கொண்ட இந்திய விசேட புலனாய்வுக்குழுவினர் நேற்று இந்தியா புறப்பட்டனர்.

இங்கு தங்கியிருந்த காலங்களில் ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபரான மரணமடைந்த சிவராஜன் குறித்து பலதகவல்களை இந்தியக்குழு திரட்டியதாகவும், இலங்கையில் புலிகளின் நடவடிக்கைகள் குறித்த விவரங்களைப் பெற்றதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கொக்குவில் வீதி விபத்து பாடசாலை மாணவன் பலி

நேற்று பிற்பகல் 1. 30மணியளவில் கொக்குவில் பிரம்படி ஒழுங்கையில் இடம்பெற்ற சைக்கிள் - வான் மோதல் விபத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் கௌரி சங்கர் (12) மரணமானார்.

சம்பவம் குறித்து தெரிய — 04 ஆம் பக்கம் பார்க்க

## கைக்குண்டு வெடிப்பு

நேற்று வவுனியா பேயாடிக்குளம் இராணுவ காவலரணில் கைக் குண்டு ஒன்று வெடித்ததில் ஒரு சிப்பாய் பலியானார் மூவர் காயமடைந்தனர்

## எம் - 70 துப்பாக்கி மீட்பு

மண்டூரில் நேற்று முன்தினம் புலிகள் நடத்திய தாக்குதலில் தமிழ் குழு வொன்றின் உறுப்பினர் ஒருவர் பலியானார் இவரிடமிருந்து எம்70- ரக துப்பாக்கியும் இரு ரவை கூடுகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

## யாழ். அரசாங்க அதிபர் நேற்று கொழும்பு பயணம்

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நேற்று காலை கப்பலில் கொழும்பு பயணமானார் கொழும்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அதிகாரிகளைச் சந்தித்து யாழ் மாவட்டத்தில் நிலவும் அத்தியாவசிய சேவைகள் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை நடத்துவார் எனத்தெரியவருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான மின்சநியோகம் பிரதன மின்மாற்றிகளுக்குரிய ஓயிலை கப்பலில் கொண்டுவருவது சம்பந்தமாக கூட்டுப்படை தலைமை அதிகாரிகளுடனும் அரச அதிபர் பேச்சு நடத்துவார்.

அத்துடன் கிராமசேவையாளர் பதவிக்கான பரீட்சை ...04 ஆம் பக்கம் பார்க்க

## கலை நிகழ்ச்சி

இன்று மாலை 7. 30 மணிக்கு வடமராட்சிப் பிரிவில் நெல்லியடி மகாத்மா திரைய ...04 ஆம் பக்கம் பார்க்க

## 72 மணிநேர ஊரடங்கு குடாநாட்டில் அமுல்!

யாழ் குடாநாட்டில் இன்று காலை 6மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது

இந்த ஊரடங்குச்சட்டம் எதிர்வரும் 18ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை 6மணி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

குடாநாட்டின் 8 தீவுப்பகுதிகளிலும் ஊரடங்கு அமுலில் இருக்காது எனவும் கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## நாதஸ்வர இசையுடன் கம்பன் விழா ஆரம்பம்

அகில இலங்கை கம்பன்கழகத்தின் 10வது ஆண்டு கம்பன் விழா நேற்று நல்லூரில் ஆரம்பமானது.

கம்பன் கழக கோட்டத்தில் இருந்து கோவில் வீதியூடாக நல்லூர் ஆதீனத்துக்கு கம்பனின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது

இதனையடுத்து நாதஸ்வர இசையுடன் நிகழ்ச்சிகள் — 04 ஆம் பக்கம்பார்க்க

## கனேடியநிதி உதவியைக் கொண்டு அகதி மாணவருக்கு உதவி

அகதிகள் புனர்வாழ்வு நிதியம் (1983) ஸ்தாபனத்திற்கு அண்மையில் கொழும்பிலுள்ள கனடா உயர் ஸ்தானிகர் காரியாலயத்தால் வழங்கப்பட்ட ஏழு இலட்சத்து முப்பத்தையாயிரம் ரூபா நன்கொடைப் பணத்தை உபயோகித்து தற்போது வடமராட்சியில் தங்கியுள்ள பலாலி, திருகோணமலைப்பகுதியில் இருந்து —04 ஆம் பக்கம் பார்க்க

ஆளுநர் லெப். ஜெனரல் நளின்

## வடகிழக்கு விவசாயிகள் கடும் உழைப்பாளிகள்

"வடக்கு கிழக்கு தமிழ் விவசாயிகள் கடும் உழைப்பாளிகள் அத்துடன் திறமைசாலிகள் இப்பகுதிகளில் தொடர்ந்து கடமையாற்றியதனால் இதனை நான் நன்கு அறிந்துள்ளேன்" இவ்வாறு வடகிழக்கு மாகாண ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனிவரட்ன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் விதை உற்பத்தி பண்ணை அங்குரார்ப்பண வைபவத்தில் பேசுகை — 04 ஆம்பக்கம் பார்க்க

6- வது தொடர்

## உணவு முத்திரைகளுக்கு பொருள் வழங்க ஏற்பாடு

வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வைத்திருப்பவர்கள் 6- வது தொடர் முத்திரைகளை தத்தமது உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ் மாவட்ட சமூக —04ஆம் பக்கம் பார்க்க

## இரண்டாவது அமைச்சரும் ஜெயலலிதாவினால் நீக்கம்

தமிழக அமைச்சரவையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராகப்பணியாற்றிய முகம்மத் காசிம் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதாவின் சிபார் [illegible] தமிழ [illegible] ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்கு சேவை செய்பவர்கள் அதிகாரம் செய்பவர்களாக மாறக் கூடாது!

## பிரதித்தலைவர் மகேந்திரராஜா அறிவுறுத்தல்

மக்களுக்கு கருத்துக்களை எடுத்துக் கூறுபவர்கள், மக்களுக்குச் சேவை செய்பவர்கள் அனைவரும் ஒருபோதும் அதிகாரம் செய்பவர்களாக மாறக்கூடாது மக்களுக்குச் சேவை செய்யும் தொண்டர்களாகவே இருக்கவேண்டுமென விடுதலைப்புலிகளின் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா கேட்டுள்ளார்.



வலிகாமம் பிரிவுச் செயலகத்தில் நடைபெற்ற கிராமிய தொண்டர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

இது குறித்த செய்தியை புலிகளின் மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவின் வாராந்த வெளியீடான 'விழிப்பு' பத்திரிகை விவரமாக வெளியிட்டுள்ளது.

'எம் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென்பதற்காகவே போராளிகள் தங்கள் உயிரை அர்ப்பணிக்கிறார்கள். மக்கள் மத்தியில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன ஒவ்வொருவரும் தனித்துவமான குணாம்சங்களைக் கொண்டவர்கள் மாணவர், இளைஞர், இளம் பெண்கள், முதியோர் அபிலாஷைகள் நிச்சயமாக வேறுபட்டே இருக்கும் இவற்றை எல்லாம் பார்த்து மக்களுக்குச் சேவை செய்பவர்கள் ஆத்திரமடையக்கூடாது.

'பலாத்காரமான முறையில் இவற்றை நீக்கமுடியாது. முதலில் இவர்கள் அனைவரையும் புரிந்துகொள்ள வேண்டும். மக்களை தெளிவுபடுத்தவேண்டும். போராட்டத்தின் தாற்பரியத்தை அவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்'.

'மக்களுக்குச் சேவை செய்பவர்கள் முதலில் பூரணவிளக்கங்களைப் பெற்றுக் கொண்டால்தான் மக்கள் மத்தியில் உண்மையான, வலிமையான கருத்துக்களை எடுத்துக் கூற முடியும். மக்களின் விடுதலைக்காகவும் அவர்களின் மேம்பாட்டிற்காகவும் சேவை செய்ய வேண்டுமெனில் முதலில் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் இருக்க வேண்டும் எம் மக்கள் மேம்பாட்டிற்காக எந்தவித அதிகார செயற்பாடுகளுமற்ற சேவை செய்பவர்களாக அவர்கள் இருக்கவேண்டும்'

இவ் 'விழிப்பு' (12.02 92) இதழில் கருத்துப் படம்' கேள்வி பதில், 'மடத்தடி மணியம்' சித்திரம், மருத்துவம், கவிஞர் வாஞ்சியின் கவிதை, செய்திகள் உள்ளிட்ட பல விடயங்கள் பிரசுரமாகியுள்ளன.

## ஆங்கில தேசிய போட்டியில தமிழ்மாணவனுக்கு முதற் பரிசு

கல்வி உயர்கல்வி அமைச்சு யுனிசெப், றெட்பானா அமைப்புகளுடன் இணைந்து நடாத்திய சிறுவர்கள் உரிமைகள் சாசனம் பற்றிய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆங்கிலக் கட்டுரைப் போட்டியில் முதற் பரிசினை ஒரு தமிழ் மாணவன் பெற்றுள்ளார்.

செல்வன் யோகசுந்தரம் அருணன் என்ற இவர் கொள்ளுப்பிட்டி சென். தோமஸ் கல்லூரியின் மாணவராவர். (37)

## சாயுங் கோபுரம் மேலும் சரிகிறது; தடுக்க நிபுணர்கள் முயற்சி

உலக அதிசயங்களில் ஒன்றான புகழ் பெற்ற சாயும் கோபுரம் கடந்த ஆண்டு மேலும் ஒரு மில்லி மீற்றர் சாய்ந்துள்ளது.

1990 இல் சாய்ந்த அளவைக் காட்டிலும் இது 20 சதவீதம் கூடுதலானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இக் கோபுரம் சாயும் வேகத்தைக் கட்டுப்படுத்த இரும்பு வளையங்களைக் கொண்டு கோபுரங்களை கட்டிடபோட நேற்று முன்தினம் முடிவெடுக்கப்பட்டது.

1173 ஆம் ஆண்டு இக்கோபுரம் கட்டத் தொடங்கியது முதலே சரியத் தொடங்கியது. மொத்தத்தில் இக் கோபுரம் இதுவரையிலும் தனது நேர் அச்சிலிருந்து 4 மீற்றர் சாய்ந்துள்ளது.

## 10 இலங்கை மீனவர்கள் இந்திய காவற்படையால் கைது!

பத்து இலங்கை மீனவர்கள் இந்திய கடலோரக் காவற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகக் கொழும்புத் தகவலொன்று தெரிவிக்கிறது.

கன்னியாகுமரிக்கு அருகில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும், இந்த மீனவர்கள் பயன்படுத்திய இரு படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## சரித்திரத்தில் முதற் தடவையாக குவைத் கடனாளியாகிறது!

குவைத் நாடு சரித்திரத்திலேயே முதற் தடவையாக வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுள்ளது.

ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளே இக் கடன்களை வழங்குகின்றன.

மொத்தம் 1350 கோடி டொலர் இவ்விதக் கடனாக இவ் வருடத்தில் குவைத்துக்குக் கிடைக்கின்றது. (37)

## சான்றிதழ்

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து நடாத்திய பெண்களுக்கான 6 மாத தையல் பயிற்சியை முடித்த 70 பேர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், தையல் கண்காட்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கைதடி சித்த மருத்துவபீட மண்டபத்தில் நடைபெற உள்ளது. (40)

# டில்லியில் இந்து-முஸ்லிம் கலவரம்!

## 7 பேர் பலி; வீடுகள் தீக்கிரை

இந்திய தலைநகரான புதுடில்லியின் அயற் பகுதியில் இந்து-முஸ்லிம் கலவரம் வெடித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலவரத்தின் முதல் நாளான கடந்த வியாழக்கிழமை குறைந்தது ஏழுபேராவது கொலைப்பட்டிருக்கலாமென இந்திய அரசு தெரிவித்துள்ளது.

அயோத்தி முஸ்லிம் மசூதி இராமர் கோவில் விவகாரம் தொடர்பாகவே புதுடில்லியில் இந்து-முஸ்லிம் கலவரம் வெடித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு பகுதியினரும் பரஸ்பரம் வீடுகளுக்குத் தீவைப்பதில் நேற்று ஈடுபட்டதாகவும் நிலைமையைக் கட்டுப்படுத்த அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஏஜென்ஸிச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

## குதிரைவண்டி-லொறிவிபத்தில் 7 சிறுவர் பலி; சாரதியும்கொலை!

இந்தியாவில் ஹரியானாவில் நேற்றுக்காலை பாடசாலைச் சிறுவர்களை ஏற்றிச் சென்ற குதிரை வண்டியொன்றின் மீது லொறி ஒன்று மோதியதில் 7 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.

ஆத்திரமுற்ற மக்கள் தாக்கியதில் குறித்த லொறியின் சாரதியும் பின்னர் மரணமானார்.

## புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளை தடுக்க இந்தியா கோருமாம்

வெளிநாடுகளில் தற்பொழுது இயங்கும் விடுதலைப்புலிகள் இயக்க அமைப்புக்களை இயங்கவிடாது தடுக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபடவுள்ளதாக சிங்களப் பத்திரிகையான 'லங்காதீப' தெரிவித்துள்ளது.

தற்பொழுது பிற நாடுகளில் இயங்கும் விடுதலைப் புலிகளின் கிளை அலுவலகங்களைத் தடை செய்யுமாறு இந்தியா அந்தந்த நாடுகளைக் கேட்டிருப்பதாகவும் 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது.

## தீவக ஆசிரியர்களுக்கு தற்காலிக இடமாற்றம்!

வேலணைக் கோட்டப் பாடசாலைகளிலும், பண்டத்தரிப்புக் கோட்டப் பாடசாலைகளிலும் கற்பிக்கும் 90 ஆசிரியர்களுக்கு யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளரினால் 01 02 92-ல் செயற்படும்படியாக தற்காலிக இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் உள்ள பல பாடசாலைகளில் கற்கும் மாணவரின் கல்விக்கு உதவக்கூடிய வகையிலும் ஆசிரியரின் வசதிகேற்பவும் அவர்களது இல்லங்களுக்கு அருகாமையிலேயே இவ் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ள இவ் ஆசிரியர்கள் தமது வரவை சம்பந்தப்பட்ட புதிய அதிபரிடமிருந்து பெற்று தமது பழைய அதிபரிடம் ஒப்படைத்த பின்னரே மாதா மாதம் இவர்களது சம்பளம் வழங்கப்படும். (15)

## மாணவரவைத் தேர்தல்

யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவரவை தேர்தல் எதிர்வரும் 19-ம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


### சிறு விளம்பரம்

கம்பியூட்டர் கல்வி

COMPUTER BASIC.
புதிய பிரிவு 17-02-92
லண்டன் I. D P. M.
அங்கத்துவ விரிவுரையாளர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது PRACTICALS GENERATOR CURRENT மூலம் பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
SCHOOL OF BUSINESS ADMINISTRATION.
16, 3 RD CROSS STREET, JAFFNA.
02019


# 24 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 4 ஆவது சுற்று மேற்காசிய அமைதிப் பேச்சும் குழப்பமடையும்?

நாலாவது சுற்று மேற்காசிய அமைதிப் பேச்சில் சிரியா, லெபனான், ஜோர்டான் பிரதிநிதிகளுடன் தானும் பங்குபற்றப்போவதாக பாலஸ்தீன விடுதலை அமைப்பு அறிவித்துள்ளது

இதன் பொருட்டு பாலஸ்தீன விடுதலை அமைப்பின் குழு ஒன்று வ[illegible]டனுக்கு விரைவில் பயணமாகவுள்ளது. இதேவேளை கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாக வேண்டிய நாலாவது சுற்று அமைதிப் பேச்சு எதிர்வரும் 24 ஆம் திகதி ஆரம்பமாகலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க இந்த அமைதிப் பேச்சில் மீண்டும் சிக்கல், குழப்பம் தோன்றலாமென அவதானிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

ஆக்கிரமிப்பு பிரதேசங்களிலுள்ள யூதக் குடியேற்றங்கள் பற்றி இந்த அமைதிப் பேச்சில் விவாதிக்க வேண்டாமென இஸ்ரேல் பிரதமர் தனது பிரதிநிதிகளைப் பணித்துள்ள அதேவேளை ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் விலகவேண்டுமெனவலியுறுத்தப் போவதாக அரபு நாடுகள் தெரிவித்துள்ளன

இந் நிலையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மேலும் புதிய குடியிருப்புக்களை அமைக்க வர்த்தக வங்கிகளிடம் இஸ்ரேல் ஒரு கோடி டொலரைக் கடனாகக் கோரியுள்ளது. இந்தக் கடனுக்கு உத்தரவாதமளிக்குமாறும் இஸ்ரேல் அமெரிக்காவைக் கோரியுள்ளது.

யூதக் குடியேற்றங்கள் அமைதிக்கு ஒருவிதத்திலும் தடையாக அமையவில்லை என அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

★ ஊர்வலம் மீதான தாக்குதலின் எதிரொலி

# காஷ்மீரியர்களின் போராட்டம் பாகிஸ்தானுக்குஎதிராகதிரும்புகிறது

காஷ்மீர் விடுதலை முன்னணியின் பாக் பிரிவினரால், இந்தியப் பகுதியிலுள்ள காஷ்மீர் மக்களுக்கு ஆதரவாக ஆரம்பிக்கப்பட்ட எல்லை கடந்து போராடும் திட்டத்தைப் பாகிஸ்தான் அரசு இராணுவபலத்தைப் பயன்படுத்தி முறியடித்துள்ளமை, பாகிஸ்தானுக்கு எதிராகவும் காஷ்மீர் மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்க வழிசமைத்திருப்பதாக மேற்கத்தைய செய்தி விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்,

பாகிஸ்தான் அரசின் இந்தப் புதிய போக்கைக் கண்டித்துப் பாகிஸ்தான் பகுதியிலுள்ள காஷ்மீர்மக்கள் கடந்த வியாழகிழமை பிரமாண்டமான ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டதை விமர்சகர்கள் இந்த ஊகத்துக்கு ஆதாரமாகக் காட்டியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாக. காஷ்மீர் மக்கள் பாகிஸ்தான் இராணுவத்தை 'நாய்கள்' என வர்ணித்துக் கோஷம் எழுப்பியமையும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த பாக. காஷ்மீர் மக்களுக்காக இந்தியப் பகுதியிலுள்ள காஷ்மீரியர்கள் நேற்று முன்தினம் சமகாலத்தில் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளமையும், இதில் பொலிஸ் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது

இதுவரை இந்தியாவுக்கு எதிராகப் போராடிய இந்திய, பாகிஸ்தானிய, காஷ்மீர் மக்கள் இந்த எல்லை கடக்கும் ஊர்வல 'சம்பவங்களை' யடுத்து இந்த இரு நாடுகளுக்கு எதிராகவும் தாம் 'காஷ்மீரியர்' என்ற ஒரே அணியில் நின்று போராட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் இது ஒரு பெரும் திருப்பம் எனவும் செய்தி விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்,

## யாழ். சகோதரர்களுக்கு பஞ்சாப்பில் கௌரவம்!

அண்மையில் பஞ்சாப் பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதிப்பட்டத்தை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்களான ப. ராகவன், செல்வி ப. காயத்திரி ஆகிய இருவரும் பெற்றுள்ளனர்.

இப் பல்கலைக்கழகத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த இருவர் ஒரே பட்டமளிப்புவிழாவில் கலாநிதிப் பட்டம் பெற்றமை இதுவே முதற் தடவையாகும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் எஸ் பதமநாதனின் பிள்ளைகள் இவர்கள். (37)

## போட்டி

யாழ் பாரதி விளையாட்டுக் கழகத்தினரால் நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட சினேகபூர்வ 'செற்அப்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியின் ஒரு ஆட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரி அணியும், இன்னொன்றில் பாரதி ஏ பிரிவு அணியும் வெற்றி பெற்றன (16)

## பாடசாலை பரீட்சைத் திகதிகள் பணிப்பாளரினால் அறிவிப்பு!

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் முதலாந் தவணைக்கான பரீட்சைத் தேர்வு பங்குனி 26 தொடக்கம் 31 வரையும், இரண்டாந் தவணைப் பரீட்சைத் தேர்வு ஆடி 23 தொடக்கம் 28-ம் திகதி வரையும், மூன்றாந் தவணைக் குரிய பரீட்சைத் தேர்வு கார்த்திகை 26 தொடக்கம் 30-ம் திகதி வரையும் நடாத்தப்படவேண்டும் என யாழ். கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்

ஆனால் பாடத் திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாது இருந்தால் இப் பரீட்சைக் காலம் பின்போடப்படலாம் எனவும் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார் (15)

## தெரிவுக்குழுவிற்கு புலிகளும் யோசனை தெரிவிக்கலாம்- அமைச்சர் ரணில்

பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு விடுதலைப் புலிகள் இயக்கமும் தமது யோசனையைத் தெரிவிக்கலாமென அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடந்தவாராந்த பத்திரிகையாளர் சந்திப்பில், பத்திரிகையாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்

விடுதலைப்புலிகள் விரும்பினால் தெரிவுக்குழு முன் சாட்சியம் அளிக்க முடியுமெனவும் அமைச்சர் ரணில் அங்கு தெரிவித்தார். இனப் பிரச்சினை தொடர்பான எந்தவொரு முடிவையும் தெரிவுக் குழுவே இனி எடுக்குமெனவும் அவர் சொன்னார்.

## தீவக ஆசிரியர்கள் கொழும்பில் தொடர்ந்தும் பணிபுரியத் தடை

தீவகப் பாடசாலைகளில் இருந்து கொழும்புக்குச் சென்று தற்காலிகமாகக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இம் மாதம் 15-ம் திகதிக்குப் பிறகு அங்கு தமது சேவையைத் தொடர முடியாது எனக் கொழும்புக் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவர்கள் இவ்வாறு தற்காலிகமாகக் கற்பிக்கும் பாடசாலைகளில் 15/ 2/ 92 க்குப் பின்னர் தொடர்ந்தும் வைவேமுத்திட அனுமதிக்கப்படமாட்டார்கள் என இவ் ஆசிரியர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தனிக் கடிதங்கள் கொழும்புக் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (15)

## ஏப்ரல் 18, 19 ஆம் திகதிகளில் எழுதுவினைஞர் போட்டிப்பரீட்சை

பொது எழுதுவினைஞர்களை அதிசிறப்பு வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஏப்ரல் மாதம் 18, 19-ம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 28-ம திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபை எழுதுவினைஞர்கள் கேட்கப்பட்ட தகுதி இருப்பின் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும் என பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

## இந்தியாவுடனான உறவை ரஷ்யா விருத்தி செய்யும்!

இந்தியாவுடன் உறவை விருத்தி செய்யப் போவதாக ரஷ்ய அதிபர் யெல்சின் ரஷ்யப் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

இதேபோன்று சீனா, ய[illegible]பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளுடனான உறவையும் விருத்தி செய்ய ரஷ்யா நடவடிக்கையெடுத்துள்ளதென அதிபர் யெல்சின் அங்கு மேலும் தெரிவித்தார்.

## மரக் கடத்தலில் இராணுவம்; மூவர் கைது; மேலும் சிலர்மீது வலைவீச்சு

தெற்கில் கொள்ளைகளில் மட்டுமின்றி சட்டவிரோத கடத்தல் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சில தினங்களுக்கு முன் இலட்சரூபாவுக்கும் மேல் பெறுமதி மிக்க கருங்காலி மற்றும் முதிரை மரங்கள் இரு லொறிகளில் கடத்திச் செல்லப்படுகையில் அவை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக ஐவர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் இராணுவத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் சில இராணுவத்தினர் தேடப்படுவதாகவும் சொல்லப்படுகிறது.

அரசியல் அவதானிப்புகள்:

## அதிகாரப் பின் விளைவுகளும் பாதுகாப்பும்

- எஸ். ஜி. எம்.

ஜே. வி. பி. நடவடிக்கைகளின் காலத்தில் அந்த இயக்கத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் மனித உரிமைகள் மீறல்களுக்காக மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர்.

பல ஜே. வி. பி. யினரின் கொலைகளுக்கு உடுகம்பொல காரணமாகவிருந்த வேளையில் உடுகம்பொலவின் நெருங்கிய உறவினர்களின் கொலைக்கு ஜே. வி. பி. இயக்கமும் காரணமாகவிருந்திருக்கிறது.

ஜே. வி. பி. இயக்கப் போராட்டத்தை, அது பலவீனப்படுத்தப்பட்ட பின்பு கொள்கையெதுவுமற்றதெனப் பலரும் கொச்சைப்படுத்தினாலும், சிங்கள சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் சார்பில் போராடவே அவ்வியக்கம் முயன்றதென்பதை யாரும் மறக்க முடியாது.

அதன் அணுகுமுறைத் தவறுகளாலேயே அது தனது அழிவுக்கு வழிவகுத்தது எனலாம். அரசு கூறுவதுபோல் ஜே. வி. பி இயக்கம் ஒழிக்கப்பட்டு விடவில்லையென்பதையே தெற்கில் ஆங்காங்கே நடைபெறும் நிகழ்வுகள் காட்டுகின்றன. அவ்வியக்கம் உருவானதற்கான காரணிகள் இன்னும் இருக்கின்றன. ஆயுதப் படையினரின் குடும்பங்களைக் குறி வைத்து கொலைகளைப் புரிந்ததே ஜே. வி. பி யினருக்கு எதிராக ஆயுதப்படையினர் தீவிர நடவடிக்கை எடுக்கக் காரணமாகவிருந்தது எனக் கருதப்படுகிறது.

ஜே. வி. பி யினர் முன் வைத்த பிரச்சினைகளைத் தீர்க்கவோ, அல்லது அதன் அரசியல் இலக்குகளை எட்டவோ ஜனநாயக முறை பயன்படவில்லை என்பதாலேயே அவ்வியக்கம் வன்முறைப் புரட்சியில் ஈடுபட்டது.

ஒரு அரசியற் பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்த்து வைக்கச் சிறிலங்கா அரசு தவறிவிட்டது. மறுத்து விட்டு ஆயுத முனையில் அப்போராட்டத்தை நசுக்க முயன்றது.

அரசாங்கம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள நாட்டின் பாதுகாப்புப் படைகளை உபயோகித்தது. உடகம்பொல போன்றவர்கள் இதை உணராமலோ, உணர்ந்தோ தமது கடமை எல்லைகளை மீறிச் செயற்பட்டனர்.

உடுகம்பொல மனித உரிமை மீறல்கள் குற்றத்திற்கு ஆளாகியுள்ள காரணத்தால் சேவை நீடிப்பு மறுக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

அவர் தலைமை தாங்கிய விசேட நடவடிக்கைப் பணியகம் மூடப்பட்டு, அதன் ஆயுதங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

உடுகம்பொல அமெரிக்கா சென்ற போதும் அவர் எதிர்ப்புகளையே சந்திக்க வேண்டியிருந்தது. இப்பொழுது உடுகம்பொலவுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டு விட்டது.

உடுகம்பொல இனி நாளாந்த மரண பயத்துடன் நடைப்பிணமாக வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார். ஜே. வி. பி யினர் இவரை எப்போதும் தாக்கலாமென்ற உளவியல் பயம் அவரைத் துரத்திக்கொண்டேயிருக்கும்.

எந்த அரசுக்கு விசுவாசமாக அவர் நடந்தாரோ அந்த அரசே அதன் நோக்கம் நிறைவேறியதும் பிழிந்த தேங்காய்த் துருவல் போலத் தூக்கியெறிந்து விட்டதை உடுகம்பொல நிச்சயமாக உணர்ந்து கொண்டிருப்பார்.

உடுகம்பொலவைப் போல வேறு சில ஆயுதப்படை அதிகாரிகளுக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சிறிலங்கா அரசு தீர்மானித்திருப்பதை அரசே அறிக்கை மூலம் தெரியப்படுத்தியுள்ளது.

இவையெல்லாம் எல்லையை மீறி செயற்படுவதன் பின்விளைவுகளை ஆயுதப் படையினருக்கு எடுத்துக்காட்டுவதாக இருக்க வேண்டும். அரசியல் பிரச்சினையை அரசியல் ரீதியாக அரசு தீர்க்க வேண்டுமென ஆயுதப் படையினர் வலியுறுத்துவதுடன், மக்கள் போராட்டங்களைத் தம்மைக் கொண்டு அரசு நசுக்குவதற்கு இடமளிக்காது நடந்தால் பல்லாயிரக்கணக்கான கொலைகளும், அழிவுகளும், மனித உரிமை மீறல்களும் தவிர்க்கப்படலாம்.

ஆயுதப் படையினரை அரசு பலிக்கடாவாக்குவதை அவர்களே தவிர்க்க வேண்டும். ஆயுதப் படையினரின் நிலை இப்படியிருக்க அரசியல் வாதிகளின் நிலைமையும் பின் விளைவை வெளிக்காட்டுவதாகவே அமைகிறது.

பாதுகாப்பு இணை அமைச்சராகவும், தேசிய பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்து முழு ஆயுதப்படைகளையும் கட்டுப்படுத்திய லலித் அத்துலத் முதலி தமது கட்சி நடாத்தும் கூட்டங்களுக்குப் பொலிஸார் தொல்லை கொடுப்பதாகக் கூறுகிறார். —04 [illegible] பார்க்க

1954-க்கு பின் பிறந்தவர்கள் 11 ரூபா செலுத்தியும்

# பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு பேட்டஸ்ரற் யந்திரம் செயலகம் வரவில்லை

யாழ். மேலதிக பதிவாளர் அலுவலகத்துக்கு போட்டஸ்ரற் யந்திரம் வந்து சேரத் தாமதம் ஏற்படுவதால் 1954 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பிறந்தவர்களுக்குரிய பிறப்புச்சாட்சிப் பத்திரங்களை வழங்க தாமதம் ஏற்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1954 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்குரிய பிறபுச்சாட்சிப்பத்திரப் புத்தகங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் 11 ரூபா மேலதிக கட்டணத்துடன் ஒரு விண்ணப்பத்துக்கு பிறப்புச் சாட்சிபத்திரம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

செயலகம் கேட்கும் புத்தகங்களை விட குறைவான புத்தகங்களையே பதிவாளர் நாயக தலைமையகம் வழமையாக அனுப்பி வருவதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

ஏற்கனவே உள்ள ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களை விட கடந்த நான்கு நாள்களில் மட்டும் போட்டஸ்ரற் மூலம் பெறுவதற்கு 800 விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

போட்டஸ்ரற் யந்திரம் வந்ததும் மேலதிகமாக பதினொரு ரூபா செலுத்திய விண்ணப்பங்களுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. 47

## தென்கொரிய ஹெலி விபத்தில் 6இராணுவ உயரதிகாரிகள் பலி!

தென்கொரியாவின் தலைநகருக்கு 240கிலோ மீற்றர் தொலைவிலுள்ள மலை மீது இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்றுக்காலைவிழுந்து நொருங்கியதில் ஒரு இராணுவ ஜெனரலும், ஐந்து இராணுவ உயரதிகாரிகளும் கொலலப்பட்டனர்.

மேலும் 4இராணுவ அதிகாரிகள் இவ்விபத்தில படுகாயமடைந்தனர்.

## வவுனியா தபாற்கந்தோர் இரவில் செயற்படவுள்ளது

இம்மாதம் 27ஆம் திகதி வவுனியா - கொழும்பு இரவு ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதால் வவுனியா தபாற்கந்தோரை இரவில் இயங்க வைக்க தபால் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து தென்பகுதிக்குச்செல்லும் தபால்களை தரம்பிரிக்கும் வேலைகள் இங்கு நடைபெறும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இதே வேளை வவுனியா தபாலகத்தை வடபகுதியில் பிரதம தபாலகமாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது 06

### கொக்குவில்...

வருவதாவது மேற்படி மாணவன் பாடசாலை விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை இவ்விபத்து இடம் பெற்றது.

விபத்துக்குள்ளாகிய மாணவனையும் வாகனச் சாரதியையும் உடன் யாழ் பொது மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது இடையில் மாணவன் மரணமானார்,

தமிழீழ காவற்துறையினர் சாரதியை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். 47. 07

### யாழ்...

வினாத்தாள்களையும் எடுத்து வருவார் எனவும் தெரியவருகிறது. 47,06

### முட்டைக்குள்...

துவாரத்தினால் வெளியே அகற்றி பின்னர்பெற்றோலை உட்செலுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. 14

### பவள்...

செய்த கூட்டுப்படைத் தலைமையகம் படையினருக்கு உதவ செங்கலடியிலிருந்து இராணுவத்தினர் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டது.

### கனேடிய..

இடம்பெயர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு சீருடைத் துணிகளும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

குமணகப்பலில் இப்பொருள்கள் வந்தடைந்துள்ளன இந்தப். பொருள்களைப் பொறுப்பேற்று சம்பந்தப்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கு விநியோகிக்க இந்த நிதியம் உடனடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது

### வடகிழக்கு

யிலேயே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்

பலாலி இராணுவ முகாமில் கடமையற்றியபோது அப்பகுதி விவசாயிகளின் உழைப்பு, திறமை என்பவற்றை நேரிலேயே கண்டேன் என அவர் மேலும் தெரிவித்தார்,

### கலைநிகழ்ச்சி..

ரங்கில் நடைபெறவிருந்த விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் மாபெரும் கலை நிகழ்ச்சி பார்வையாளர்களின்வசதி கருதி நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது

இதில் வடமராட்சிக் கலை பண்பாட்டுக் கழகத்தின் செவ்வானம் இசைக்குழுவின் எழுச்சிப்பாடல் நிகழ்ச்சியும் வலிகாமம் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் உருவான ''சுதந்திரப் போர் வெல்லும்'' என்ற நாடகமும் இடம் பெறவுள்ளது.

### வீரச்சாவு

மட்டக்களப்பு மணற்பிட்டி என்ற பகுதியில் படையினர் மறைந்திருந்து தாக்கியதில் ரவிராஜ், ராம்ராஜ் என்ற இருபோராளிகள் வீரச்சாவு எய்தினர்.

### அங்ராட் மாநாடு

கொலம்பியாவில் நடைபெற்றுவரும் அங்ராட் நிறுவனத்தின் எட்டாவதுமாநாட்டில் கலந்து கொள்ள வர்த்தக அமைச்சர் ஏ. ஆர் மன்சூர் தலைமையில் நால்வரைக் கொண்ட குழு கொலம்பியா புறப்படுகின்றது.

இலங்கைக்கு தொழில்நுப உதவிகளை வழங்கும் இந் நிறுவனத்தின் மாநாடு இம்மாதம் 8 ஆம் திகதி தொடங்கியது எதிர் வரும்25 ஆம் திகதி முடிவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

### உணவு...

சேவைகள் உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்

அவற்றில் 9 ஆம் புள்ளிக்கு இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து அவற்றுக்கான பொருள்களைப் பெறுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோல 10 ஆம் புள்ளிக்கு மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னரும்

11 ஆம் புள்ளிக்கு மார்ச் 25 ஆம் திகதிக்கு முன்னரும், 12 ஆம் புள்ளிக்கு ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னரும் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்திலிருந்து புதிய முத்திரைகள் வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 04, 25, 06

## உழைப்பாளர் அணிதிரள மாபெரும் பொதுக்கூட்டம்

கிராமிய உழைப்பாளர்களுக்கான மாபெரும்பொதுக் கூட்டம் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நாளை ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு நடைபெறும்.

தேச விடுதலைப் போராட்டத்தில் உழைப்பாளர்களின் பங்கு என்ற தலைப்பில் திருமூர்த்தி அவர்கள் உரையாற்றுவார்கள் மற்றும் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் பகுதிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்களும் உரை நிகழ்த்துவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச்சங்க வாரம்

## ஆகக்கூடுதலான நிதி யாழ்மாவட்டத்தில் சேர்ந்தது

கடந்த ஆண்டு இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் நாடு முழுவதும் நடாத்திய கொடி வாரத்தில் யாழ் மாவட்டத்தில் சேகரிக்கப்பட்ட பணமே அதிகமானது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பிரிவுக் கிளைகள் மூலம் 3லட்சத்து 117 ரூபா சேர்ந்துள்ளது.

செஞ்சிலுவைச்சங்க கொடி வாரத்தின் மூலம் சேகரிக்கப்படும் நிதி வடக்கு கிழக்கு பகுதிக்கு செல்வதாக தெற்கில் உள்ளவர்கள் கருதியதால் அப்பகுதிகளில் கொடிவாரத்துக்கு அதிக பணம் சேரவில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது. 06

அனைத்துக் கட்சிகள் கூட்டம்:

## பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு காங்கிரஸ் கோரிக்கை

சென்னையில் இன்று நடைபெறும் அனைத்துக்கட்சிகள் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கும் முடிவைக்கைவிடுமாறு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

காவேரி நீர் தொடர்பாக நடுவர் மன்றத் தீர்ப்பை அமுல் படுத்துவதில் ஏற்படும் சிக்கலைத் தீர்த்துக்கொள்ள பிரதமர் முன்னிலையில் இரு மாநில முதல்வர்களும்பேசுவது அவசியமானது என அவர்கருத்துவெளியிட்டார்.

இதேவேளை அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கும் முடிவு துர் அதிஷ்டவசமானது எனதமிழக எதிர்க்கட்சித் தலைவர் பாலசுபபிரமணியம் தெரிவித்துள்ளார்.

பகிஷ்கரிக்கும் முடிவுஎன்பது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தடையாக இருக்குமென்றும், பிரதமருடன் பேசுமாறும் தமிழக முதல்வரை கருணாநிதி வலியுறுத்தி வந்தார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்,

### நியமனம்

கோப்பாய் கொத்தணிப் பாடசாலைப்பகுதியில்இருந்து 12 தொண்டர் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்'

வடமராட்சி கோட்டக் கல்விப் பிரிவில் 180 தொண்டர் ஆசிரியர்கள் நியமனம் பெறவுள்ளனர் 10 , 06

### நாதஸ்வர...

ஆரம்பமாகின.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நேற்றைய முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 07

### இரண்டாவது...

ஆளுநர் பீஷம நாராயணசிங் அமைச்சரைப் பதவி நீக்கினார். 29 வயதுடைய நாகூர் மீரான் என்பவர் புதிய அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்



### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திருநெல்வேலி பிரதான உணவகம், பாலசிங்கம் விடுதி உணவகம் ஆகியவற்றை நடாத்துவதற்காக இலங்கை யாழ் பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1992 - 02 - 28 திகதி நண்பகல் 12-00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் தனித்தனியாக ஏற்றுக்கொள்ளபபடும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா50/-ம் ஒவ்வொரு உணவகத்திற்கும் தனித்தனியாக பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினைச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணபங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

பதிவாளர்

02030 14 02-92



### அதிகாரப் –

தம்மை இரகசியப் பொலிஸார் பின் தொடர்வதாகக் கூறுகிறார். தமது கட்சிக்குள் ஆதரவாளர்கள் என்ற போர்வையில் இவர்கள் ஊடுருவுவதாகவும் குற்றஞ்சாட்டுகிறார்.

இவையெல்லாம் இவருக்குப் புதிதானவையாக இருக்க முடியாது அமைச்சராகவிருந்து இவர் செய்வித்ததை இப்போதைய அமைச்சர் இவருக்குச் செய்விக்கிறார் என்பது தான் உண்மையும், வித்தியாசமும்.

அதிகாரத்தில் இருக்கும் போது அத்துலத்முதலி மட்டுமல்ல எல்லோருமே அதிகாரப் பின் விளைவுகள் பற்றிச் சிந்திப்பதில்லை. அதிகாரம் போன பின்புதான் சுதந்திர உணர்வுகள் தோன்றுகின்றன.

எனவே அரசாங்க அமைச்சர்கள் ஆனாலும் சரி, அதிகாரிகள் ஆனாலும் சரி தமது அதிகாரம் போன பின்பும் சமூகத்தில் பிரச்சினையின்றி தாம் வாழ வேண்டுமென்ற யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுவதேபல அரசியற் பிரச்சினைகளின் சுமுகத் தீர்வுகளுக்கு வழி வகுப்பதாக அமையும்.

ஜனநாயக செயற்பாட்டில் இந்த வரையறை அவசியமானதொன்றாகக் கருதப்பட வேண்டும்.



## காலமானார்

### பேராயர் சபாபதி குலேந்திரன்

தென்னிந்தியத் திருச்சபை யாழ்ப்பாண முன்னாள் பேராயர் (1947-1970) அதிவண சபாபதி குலேந்திரன் காலமானார். இவர் காலஞ்சென்ற திருமதி மதுரம் குலேந்திரன் அவர்களின் கணவரும் திருமதி கருணா ரட்ணராஜா, தயாநிதி குலேந்திரன், (மாலைதீவு), அனுக்கிரக ஜோதி குலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் நலடக்க ஆராதனை வட்டுக்கோட்டை பேராலையத்தில் 17-02-92 திங்கள் காலை 8 30 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
Diocesan Secretary
J. D. C. S. I.

02031



இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ (பிறைவேற்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் ...கல்வியங்காடு டச்சுவீதி'லஷ்மிபில்டிங்'கில் ...ள அச்சகத்... 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது